# புல்லட் சேம்பர்



ராஜேஷ்குமார்





## 1

மூன்றாவது கண் - டிடெக்டிவ் ஏஜென்ஸி. ராத்திரி பத்துமணி. ஒரு கேஸ் ஹிஸ்டரியைப் பார்த்து டைப் பண்ணிக் கொண்டிருந்த கவிதா - தன் சின்ன வாயை அதிகபட்சமாய் திறந்து 'ஆ..ஆவ்' என்று கொட்டாவி விட்டு - கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி நெட்டி முறித்தாள்.

ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த சுரேன் நிமிர்ந்து புன்னகைத்தான் 'என்ன தூக்கமா'

''ஆமா... பாஸ்''

''உதைப்பேன்... எட்டு மணியிலிருந்து மூணு கப் டீ விழுங்கியிருக்கே.''

''முடியல்ல பாஸ்...''

''ஒரு ஜோக் சொல்றேன் கேக்கிறியா..? உடம்புக்கு புத்துணர்ச்சி வரும்...''

''சொல்லுங்க பார்க்கலாம்''

சுரேன் சொல்ல ஆரம்பித்தான் ''நள்ளிரவு நேரம். டெலிபோன்

நமக்கென்ன...?

''அய்யோ பாஸ் விவரம் தெரியாமே பேசா தீங்க...? பி.ஜே.பி. ங்கிறது கட்சியில்லை...?''

''பின்னே...?

''பயங்கர ஜொள்ளு பார்ட்டின்னு அர்த்தம்.''

''பயங்கர ஜொள்ளு பார்ட்டியா...?''

''ஆமா... காலேஜ் ஸ்டுடேண்ட்ஸ் மத்தியில் இந்த வார்த்தை தான் இப்ப பிரபலம்... லாயர் ஜெகந்நாதனை நீங்களே பார்த்துட்டு வந்துடுங்க பாஸ்...''

கவிதா கையசைத்துவிட்டு - மாடிப்படிகளில் இறங்கினாள். அடுத்த சில நிமிடங்களுக்குள் அவளுடைய கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர் சீறி - அடக்கமாய்ப் புகை கக்கி 'ர்ர்ர்ர்ர்' என்று போனது.

சுரேன் ஜன்னலினின்றும் திரும்பி - படித்துக்கொண்டிருந்த புத்தகத்திற்கு வந்தான். பத்தரை மணி வரைக்கும் படித்துவிட்டுப் கிளம்பலாம் என்ற யோசிப்போடு உட்கார்ந்தவனை - டெலிபோன் அலறி உசுப்பியது.

ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''



ஒரு பெண் குரல் கேட்டது. ''தேர்ட் ஐ' டிடெக்டிவ் ஏஜென்ஸி...?''

''எஸ்...''

''மிஸ்டர் சுரேன்...''

''நீங்க சுரேன்கிட்டத்தான் பேசிட்டிருக்கீங்க...''

''மிஸ்டர் சுரேன். நான் ஒரு டாக்டர். பேரு ஹேமலாதா. கௌலி ப்ரௌன் ரோட்டில் இருக்கிற 'ஹேமா நர்சிங் ஹோம்' என்னோடது தான்.''

''சரி...''

''உங்ககிட்டே ஒரு உதவி கேட்கத்தான் போன் பண்ணினேன்.''

''சொல்லுங்க...''

''நான் ஒரு ப்ளாக் மெயிலர்கிட்ட மாட்டியிருக்கேன் மாத மாதம் எனக்குப் போன் பண்ணியோ.... நேர்ல வந்தோ... ஒரு பெரிய தொகையை வாங்கிட்டுப் போயிடறான்... அவன்கிட்ட யிருந்து தப்பிக்கிறக்கு நீங்க தன் உதவணும்.''

''ப்ளாக் மெயின் பண்ற ஆசாமி யார்?''

''அவனைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. அதாவது அவன் எதையுமே என்கிட்டே சொல்லலை... மாசா மாசம் வீட்டுக்கோ க்ளீனிக்குக்கோ வருவான் பணத்தை வாங்கிட்டுப்

என்னோட வழிக்கு வராத
பண்ணணும்... நீங்க இந்த உதவி
எனக்குப் பண்ணிக் கொடுத்தா... ஃப
எவ்வளவு வேணும்ன்னாலும் தர்றேன்

''ப்ளாக் மெயிலர் எப்
இருப்பான்...?''

''அவன் ஒவ்வொரு மாச
ஒவ்வொரு விதமா வருவான்.
மாசம் தாடி மீசையோடு வருவா
அடுத்த மாசம் மொட்டை. அதுக்கடு
மாசம் 'சிங்' மாதிரி ட்ரஸ் பண்ணி
வருவான். எந்த மாசம் எப்
வருவான்னு எனக்கே தெரியாது.''

''சரி... நான் ஹோட்டலு
வந்துடறேன்...''

''நீங்க 10.45க்கெல்லாம் ரூ
கார்டன்ல இருக்கணும் மிஸ்
சுரேன்...''

''இருப்பேன்...! பை... த... பை
உங்களை நான் எப்படி அடையாள
கண்டுக்கிறது....? இதுக்கு மு
உங்களை பார்த்ததில்லையே..?''

''டோண்ட் ஒர்ரி! நீங்க என்ன
சுலபமா -அடையாள
கண்டுபிடிக்கலாம். ஒயிட் ஸாரி, ஒயி
ப்ளவுஸ், ஒயிட் ஸ்டிக்கர், ஒய
ரோஸ், ஒயிட் ஸ்லிப்பர்ஸ்... இது நா
பக்கவாட்டுல பார்த்தா பழை



ஆர்,விஜயா சாயல் தெரியும்.''

'இது போதும்...''

'சரியா பத்தே முக்காலுக்கு...?''

'வந்துடறேன்.''

சுரேன் ரிஸீவரை வைத்துவிட்டு
அடர்த்தியான தலை முடியை
தி விட்டுக் கொண்டான். 'இது
திரியான ப்ளாக் மேயில் கேஸை
டெண்ட் பண்ணி வெகு
ளாயிருற்று.''

கடிகாரத்தில் நேரம் பார்த்து
தரை மணியாணதும் ஆபீஸைப்
டிக் கொண்டு ஸ்கூட்டருக்கு
தான். அங்கிருந்து இரண்டு கிலோ
ட்டர் தொலைவில் இருந்த
பனிகலா த்ரீ ஸ்டார் ஹோட்டலுக்கு
ாய் சேர்ந்த போது--

நேரம் 10.40

ரூஃப் கார்டனுக்கு லிஃப்டில்
பணித்து - மொட்டை மாடியின்
லுசிலுக்கும் காற்றில்
ரவேசிக்கையில் 10.42.

ரூஃப் கார்டன் உற்சாகமாய்
ருந்தது. ஒரு பர்த்டே பார்ட்டியின்
காலாகலம் தெரிந்தது. கம்பங்களில்
பாருத்தப்பட்டிருந்த செவ்வக
ரடியோ பெட்டிகளில் கிதார் கம்பிகள்

'இந்நேரத்துக்கு யார்?'

ஜீரோ வாட்ஸ் விள
வெளிச்சத்தில் நடந்து-ஹாலைக் கட
-வாசல் கதவுக்கு வந்தார். கத
பொருத்தியிருந்த வ்யூ ஃபைண்
லென்ஸில் கண்ணை வைத்
பார்த்தார்.

காக்கி யூனிஃபார்ம் தெரிந்தது.

உற்றுப் பார்த்தார்.

சப்-இன்ஸ்பெக்டர்.

கதவின் தாழ்ப்பானை விலக்கின
கதவை உள் வாங்கி திறந்த
செளியே நின்றிருந்த
இன்ஸ்பெக்டர் அட்டென்ஷனு
வந்து-நெற்றிக்கு கையைக் கொன
போய் 'சுளீர்' என்று சல்யூட் அடித்த
யார்..?" "நான் செம்மேடு போல
ஸ்டேஷன் எஸ்.ஐ." ஜெயகோபா
நெற்றியைச் சொறிந்தார். "என்
விஷயம்?"

"டி.எஸ்.பி. உங்ககிட்ட
முக்கியமான விஷயத்தை கன்
சொன்னார். அந்த பேரூர் ரெட்டை
கொலை சம்பந்தமா..."

"உள்ளே வாங்க..."

சப்-இன்ஸ்பெக்டரை உள்
வரவிட்டு கதவைச் காத்தினார். ஹ
சோபாவுக்கு கூட்டிப் போ



காரவைத்து "சொல்லுங்க"
றார்.
ாஸ்.ஐ. தொப்பியைக் கழற்றி
யில் வைத்துக் கொண்டு-மெல்லிய
யில் பேச ஆரம்பித்தார். "ஸார்! அந்த
ட்டைக் கொலை சம்பந்தமா-
பன்ஸ் தரப்புலாயர் நாளைக்கு
ர்ட்ல ஒரு முக்கியமான சாட்சி
க் கொண்டு வர இருக்கார். அந்த
ட்சியை கோர்ட் கூண்டு ஏறவிட்டா...
ாலீஸ் தரப்பு வாதம் படுத்துக்கும்
னால..."

அதனால..?"

"அந்த சாட்சியை முடக்கணும்ன்னு
ாஸ்.பி. சொல்லி விட்டார்."

ஜெயபோலான் புன்னகைத்தார்.
ன் சாயந்திரமே டி.எஸ்.பி.கிட்டே
தைப்பத்திப் பேசிட்டேன். அந்த
ட்சி நாளைக்கு காலையில்
ார்ட்டுக்கு வரமாட்டான். வேண்டிய
பாடுகளைப் பண்ணியாச்சு..."

"என்ன ஏற்பாடு ஸார்..?"

"உங்ககிட்ட டி.எஸ்.பி. ஏதும்
ால்லலையா..?"

"இல்ல ஸார்... உங்களைப் போய்
ர்க்கச் சொன்னார். நீங்க என்ன
ால்றீங்களோ அதைச் செய்யச்
ன்னார். இந்த ஃபைலையும்

"அவங்க டாக்டர் ஹேமலதா ஸார்..."

"இந்த ஹோட்டலுக்கு அடிக்கடி வருவாங்களா...?"

"வாரத்துக்கு ஒரு தடவையாவது வந்து ரூஃப் கார்டன்ல டின்னர் சாப்பிட்டுவிட்டு போவார் ஸார்..."

"தனியாத்தான் வருவாங்களா..?"

"ஆமா.."

"டாக்டரம்மாவுக்கு கல்யாணம்?"

"எனக்குத் தெரியாது ஸார்" பேரர் நகர்ந்து போய்விட சுரேன் ஐஸ்க்ரீம் கிண்ணத்தை தள்ளி வைத்துவிட்டுதன் பாக்கெட்டில் இருந்த சின்ன டயரியை எடுத்து ஒரு பக்கத்தைக் கிழித்து - பால் பாயின்ட் பேனாவால் மளமளவென்று எழுத ஆரம்பித்தான்.

டாக்டர்!

இப்போது நேரம் 11.35.அந்த ப்ளாக் மெயிலர் இன்னமும் வரவில்லை. மேற்கொண்டு என்ன செய்வது...? நீங்களும் நானும் சந்தித்துப் பேச வேண்டும். இங்கேயே பேசுவோமா..? உங்களுக்கு விருப்பம் இருந்தால் என் மேஜைக்கு வரவும் -சுரேன்.

காகிதத்தை நான்காய் மடித்து வைத்துக் கொண்டான். பேரர்



சிகரெட்டோடு வந்து நின்றதும் கையிலிருந்து காகித்தை நீட்டினான்.

"பேரர்!இந்த சீட்டை அந்த டாக்டரம்மாகிட்டேகுடுத்துடு..."

அவன் தயங்க-சுரேன் ஒரு பத்து ரூபாய் நோட்டை அதனோடு இணைத்து நீட்டினான். பேரரின் பல வரிசை தெரிந்தது. "தேங்க்யூ... ஸார்..."

"பேரர் சீட்டைக் கொண்டு போய் கொடுப்பதும் - ஹேமலாதா அதை வாங்கி மற்றவர்களுக்குத் தெரியாமல் பிரித்து படிப்பதும் தெரிந்தது. சுரேன் ஐஸ்க்கீரிமையைத் துளித் துளியாய்ச் சாப்பிட்டு'-ஒரு பத்து நிமிஷத்தை கரைத்திருந்த போது -பேரர் பில் தட்டோடு வந்தான். குனிந்து பில் தட்டை வைக்கும் போது -கிசுகிசுப்பான குரலில் சொன்னான்.

"ஸார்!பில்லுக்கு கீழே அந்த டாக்டரம்மா எழுதின ஒரு ஸ்லிப் இருக்கு..."

சுரேன் கிசுகிசுப்பாய்

தட்டை தன் பக்கமாய் இழுத்து-பில்லுக்கு கீழே இருந்த அந்த ஸ்லிப்பை எடுத்தான்.

சுரேன்! அந்த ப்ளாக்மெயிலர் வரவில்லை. காரணம் தெரியவில்லை. இனிமேல் நாம் காத்துக் கொண்டுருக்க

வேண்டாம். உங்களோடு பேச நானும் விரும்புகிறேன். கார் பார்க்கிங்கில் என்னுடைய பியட் கார் நிற்கிறது கதவு லாக் செய்யப்படவில்லை. நீங்கள் இங்கிருந்தது கிளம்பி- காருக்குள் போய் இருங்கள். கண்ணாடி களை மேலே ஏற்றிக் கொள்ளுங்கள். நானும் உடனே வந்து விடுகிறேன்- ஹேமலதா.

சுரேன் அந்த கடித ஸ்லிப்பைப் பத்திரப்படுத்திக் கொண்டு பில்லுக்குப் பணத்தை செலுத்திவிட்டு எழுந்தான். ஸ்டிக்கால் பல்லை நெருடிக் கொண்டே லிஃப்டில் இறங்கி- ஹோட்டல் ரிசப்ஷனைக் கடந்து- காரிடாரைத் தாண்டி-ஹோட்டல்ன் பின்பக்கம் இருந்த கார் பார்க்கிங்கிற்கு வந்தான்.

கார் பார்க்கிங் இருட்டில் இருந்தது. கார்கள் ஓரளவிற்கு நெருக்கமாய்த் தெரிய, சுரேன் ஒவ்வொரு காராய் பார்த்துக் கொண்டே நடந்தான்.

இரண்டு நிமிஷ தேடலுக்குப் பின் TDV 6734 சந்தன நிற பியட் பார்வைக்குக் கிடைத்தது. சுரேன் முற்றும் பார்த்தான்.

கப்பியிருந்த இருட்டில் ஆழமான நிசப்தம். காரை மெல்ல நெருங்கி-அதன் கைப்பிடியைப் பற்றி இழுத்தான்.



பின்பக்கக் கதவு பளிச்சென்று திறந்து கொண்டது. உள்ளே நுழைந்து- சீட்டுக்கு சாய்ந்தான். கண்ணாடி களை ஏற்றிவிட்டுக் கொண்டு- ஹேமலதாவுக்காகக் காத்திருந்தான். விநாடிகள் விரைந்தது.



# 4

பிராசிகூட்டர் ஜெயகோபால் வியர்த்தார். நடுக்கமாய் எழ முயன்றார்.

போலீஸ் யூனிஃபார்மோடு -எதிரில் உட்கார்ந்து பெரிதாய் புன்னகைத்துக் கொண்டிருந்த அந்த இளை ஞன் தன் மார்புப் பகுதிக்குள் கையை நுழைத்து- நிதான மாய் ரிவால்வரை உருவிக் கொண்டான். "ஸாரி மிஸ்டர் பிராஸிகூட்டர்!- உங்ககளை இவ்வளவு சுலபமா மீட் பண்றதுக்கு இதைவிட சிறந்த உபாயம் எனக்குத் தோணலை ,இந்த போலீஸ் யூனிஃபார்ம் எனக்குப் பொருத்தமாயிரக்கா...?"

"யா...யார்...நீ...?"

"நான் யார்ன்னு உனக்குத் தெரிய

வேண்டிய அவசியம் இல்லை. அப்படியே நீ தெரிஞ்சுகிட்டாலும்... அதனால உனக்கு பிரயோஜனமும் இல்லை... ஏன்னா நீ உயிரோ இருக்கப் போறது இன்னும் சில நிமிடங்கள் தான்..."

"நா...என்ன...தப்பு பண்ணினேன்...? என்னை எதுக்காக கொல்லணும்?"

"நீ பண்ணின தப்புகளைப் பத்தி என்கிட்டேயே கேக்கறியா?" நீயும். போலீஸும் சேர்ந்து எத்தனை நிரபராதிகளைத் தூக்குக் கயித்துக்கும், ஆயுள் தண்டனைக்கும் அனுப்பியிருக்கீங்க...?"

"அ...அது...அது..."

"சொல்லு..."

"எ..என்னுடைய தொழில்...ஒரு பப்ளிக் பிராசி கூட்டரோ வேலை குற்றவாளிக்கு தண்டனை வாங்கித் தர்றதுதான்..."

"உனக்கு உயிர் பிழைக்கணும்ன்னு ஆசை இருந்தா நான் சொல்றபடி கேக்கணும்... கேப்பியா..?"

"கே...கேக்கிறேன்...!"

"உன்னோட கார் சாவியை எங்கே வெச்சிருக்கே?"

"டி.வி.டேபிள் மேலே.."



எடுத்துக்க..."

ஜெயகோபால் தயக்கமாய் நடந்து போய் எடுத்துக் கொண்டார்.

"வெளியே நட..."

நடந்து போர்டி கோவுக்கு வந்தார். போர்டி கோடிவில் நின்றிருந்து காரைக் காட்டி அவன் சொன்னான். "ட்ரைவிங் சீட்ல போய் உட்கார்..."

ஜெயகோபால் ட்ரைவிங் சீட்டுக்குப் போய் – ஸ்டியரிங்கை பிடித்ததும் அவன் பின் சீட்டுக்கு போய் அவருடைய பிடரியில் துப்பாக்கி முனையை வைத்தான்.

"ம்...ஓட்டு..."

"எ...எங்கே?"

"ஜி.டி.ரோட்ல நேரா போ..."

கார் கிளம்பியது.

ரோடு . பாரலைவணமாய் தெரிய – கார்ய்ரேஷன்குழல் விளக்குகள் மட்டும் மின்சாரத்தை ஏராளமாய் தின்று வெளிச்சத்தை உதிர்த்துக் கொண்டிருந்தது. ரோடு ஓரங்ளில் ஆட்டோக்கள் தூங்கின.

"எ...என்னை... கொன்னுடாதே..."

"காரை பேசாமே ஓட்டணும் ...நான் ஏதாவதுகள்வி கேட்டா மட்டும் பதிலைச் சொல்லணும்..." கார் ஜி.டி.

ரோட்டில் 'ஜ்ஜ்ர்ர்ர்' ரென்று டயர்களைத் தேய்த்துக் கொண்டு ஒரு நிமிஷம் ஓடிய பின் "லெஃப்ட்..."என்றான். கார் இடது பக்க ரோட்டிக் கொண்டு திரும்பியது. உங்களுக்கு என்ன வயது பி.பி...ஸார்?"

"நாற்பது..."

"கல்யாணம் பண்ணிக்கலை போலிருக்கு?"

"இ...இல்லை..."

"ஏன்...?"

ஜெயகோபால் மௌனம் சாதித்தார். அவன் சிரித்தான். 'கல்யாணம் பண்ணிக்கிட்டா... ஊர்ல இருக்கிற ''கல்யாணம் பண்ணிக்கிட்டா... ஊர்ல இருக்கிற பொண்ணுங்களை மேய முடியாதுன்னு தானே...?''

ஜெயகோபால் திரும்பி முறைத்தார்.

''உண்மையைச் சொன்னா கோபம் வருதாக்கும்...''

கார் ஒரு குழியில் இறங்கித் தடுமாறியது.

''பார்த்து ஓட்டுங்க பி.பி. ஸார்... துப்பாககி உங்க கழுத்துல பதிஞ்சிருக்கு. நீங்க இப்படி திடீர்ன்னு குழியில வண்டியை விட்டா... ட்ரிக்கர் மேலே என் விரல் பட்டுடும்... அப்புறம் உங்க



தலை சிதர் தேங்காய் தான்... ம்... ரைட்ல ஓடிங்க...''

கார் வலது பக்கம் திரும்பியது.

ஜெயகோபால் ஈனஸ்வரத்தில் முனகினார். ''என்னை எங்கே கூட்டிட்டுப் போறே..?''

''போனதும் தெரிஞ்சுக்குவீங்க...''

''எ...எ... என்னை கொன்னுடாதே... உனக்கு எவ்வளவு பணம் வேணும்ன்னாலும் தர்றேன்...''

''பார்த்தியா...? உன் புத்தி உன்னை விட்டுப் போகலை... விலை பேச ஆரம்பிச்சுட்டியே... உன்னோட உயிர் ரொம்ப காஸ்ட்லியாச்சே...? எவ்வளவு பணம் தருவே...?''

''என் சொத்து பூராவும் தர்றேன்... என்னைக் கொன்னுடாதே?''

''உயிர் மேல உனக்கு அவ்வளவு ஆசையா...? இதே ஆசை தானே மத்தவங்களுக்கும் இருக்கும்..? எவனோ ஒரு கொலையைப் பண்ணிட்டு போயிடுவான். போலீஸ் உண்மையான கொலையாளியைப் பிடிக்கத்துப்பில்லாமே... நிரபராதி எவனையாவது அமுக்க வேண்டியது. அவனை அடிச்சு உதைச்சு... வலுக்கட்டாயமா குற்றத்தை ஒத்துக்க வைக்க வேண்டியது. அப்புறம் நீங்க...

உங்க சட்ட அறிவைப் பயன்படுத்தி - சாட்சியங்களை உற்பத்திப் பண்ணி - ஸ்டாக் விட்னஸ்களை கூண்டுல ஏற்றி - அந்த நிரபராதிகளுக்குத் தூக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டியது...''

''அ... அதெல்லாம்... போலீஸ் செய்யற வேலை...''

''லெஃப்ட்ல கட் பண்ணிக்க...''

கார் திரும்பியதும் - நகர எல்லை காணாமல் போயிற்று. கார்ப்பரேஷன் விளக்குகள் அரிதாகி - அங்கங்கே அடை அடையாய் இருட்டு. ரோட்டோரத்தில் புளிய மரங்கள் வரிசையாய் நின்று கிளைகளை ஆட்டியது.

ஜெயகோபால் வியர்த்து ஒழுகினார்.

'இவன் எங்கே கூட்டிக் கொண்டு போகிறான்?'

கார் மேலும் ஐந்து நிமிஷ நேரம் ஓடியதும் - அவனுடைய கையிலிருந்த பிஸ்டல் கழுத்துப் பகுதியில் அழுத்தமாய் பதிந்தது.

''வலது பக்கமா திருப்பு...''

''காரை கொஞ்சம் நிதானமாக ஓட்டு. இந்த ரோட்ல குண்டும் குழியும் அதிகம்...''



ஜெயகோபால் காரில் வேகத்தைக் குறைத்தார். கார் ரோட்டில் தத்தியது. எம்பியது. அரை நிமிஷ சிரமமான பயணத்திற்குப் பிறகு அவன் கையிலிருந்த ரிவால்வர் அவருடைய கழுத்தை மறுபடியும் அழுத்தியது.

''நிறுத்துங்க பி.பி. ஸார்.''

கார் நின்றது.

ஜெயகோபால் குனிந்து கண்ணாடியில் சுற்றும் முற்றும் பார்த்தார். எந்தத் திசையிலும் ஒரு துளி வெளிச்சமுமில்லை. கறுப்பைக் கரைத்து ஊற்றிய மாதிரி இருட்டு.

'இ...இது...எந்த இடம்?''

அவன் சிரித்தான்.

ஜெயகோபால் இறங்கி நின்றார். செருப்பணியாத கால்களுக்குக் கீழே - காய்ந்த சருகுகள் நொறுங்கியது. முதுகில் துப்பாக்கியின் முனை இம்சித்தது. தலைக்கு மேலே மரங்கள். காற்றின் வேகத்தில் கிளைகள் ஆட்டின.

அவன் குரல் கொடுத்தான்.

''நாச்சியப்பா...!''

''....''

''நாச்சியப்பா...!''

''வந்துட்டேன்யா...'' கொஞ்சம்

தொலைவிலிருந்து ஒரு கிழட்டுக் குரல் கேட்டது. தொடர்ந்து - இருட்டின் பின்னணியில் - அந்த அரிக்கேன் விளக்கு அசைந்து வந்தது.

ஜெயகோபால் எச்சில் விழுங்கினார்.

''யா...யாரது...?''

''பொறுங்க பி.பி. ஸார்... பக்கத்துல வந்தா எல்லாம் தெரிஞ்சுடும்...''

அரிக்கேன் விளக்கு அசைந்து பக்கத்தில் வந்தது. இடது கையில் நீண்ட கழியுடன் - உடம்பு முழுக்க போர்வையை போர்த்திக் கொண்டு அந்தக் கிழவன் தெரிந்தான். சூப்பிய பனங்கொட்டை மாதிரி இருந்த தலையில் - நரை ரோமம் சிலும்பலாயத் தெரிந்தது.

''வாங்க தம்பி... ஆளைக் கூட்டிட்டு வந்துட்டீங்களா?''

''ம்... இதோ பாரு....''

கிழவன் விளக்கின் வெளிச்சத்தைப் பெரிதாக்கி ஜெயகோபாலின் முகத்தைப் பக்கத்தில் வைத்துப் பார்த்து - சிதலமான பற்களில் சிரித்தான்.

''போலாமா தம்பி...''

''ம்.... முன்னாடி நட....''

கிழவன் மெல்ல நடந்தான்.



ஜெயகோபால் வியர்த்து வழிந்தபடி திரும்பினார். 'எ... என்னைக் கொன்னுடாதே...!''

''பேசாமே நடக்கணும்'' நெட்டித் தள்ளினான் அவன்.



# 5

காருக்குள் காத்திருந்தான் சுரேன். வெளியே அடித்த குளிர்க்காற்றுக்கு காருக்குள் நிலவிய கதகதப்பு இதமாய் இருந்தது.

ரேடியம் பதித்த வாட்ச்சில் நேரம் பார்த்தான். மணி 12.02. கார் பார்க்கிங்கில் நின்றிருந்த கார்களில் ஒன்றிரண்டு புறப்பட ஆரம்பித்தன. 'ஹோட்டலின் பின்பக்க விளக்குகள் அணைக்கப்பட்டு - கட்டிடத்தின் உச்சியில் இருந்த நியான் எழுத்துக்கள் நிறம் இழந்தன.

'டாக்டரை எங்கே இன்னும் காணோம்...?'

கதவின் கண்ணாடியை மெல்ல கீழே இறக்கி ஹோட்டலின் முகப்பை எட்டிப்

பார்த்தான்.

ஹேமலதா தட்டுப்படவில்லை.

'இன்னமும் ரூஃப் கார்டனில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்கிறாள்...?'

'ஒருவேளை அந்த ப்ளாக் மெயிலர் வந்து விட்டிருப்பானோ...?'

நேரம் ஊர்ந்தது.

12.05

12.10

12.15

சுரேன் அலுத்துப் போய் ஒரு முடிவுக்கு வந்தான். 'இனியும் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை'.

கதவுக் கைப்பிடி மேல் கையை வைத்து - திறக்க முயன்ற விநாடி - 'டப்... டப்...' என்ற அந்த ஸ்லிப்பர் சத்தம் கேட்டது.

எட்டிப் பார்த்தான்.

ஹேமலதா தான்.

வேகவேகமாய் வந்து காரில் முன் பக்கக் கதவை திறந்து - ட்ரைவிங் சீட்டில் சரிந்தாள்.

கதவைப் படீரென்று சாத்தி - சாவியை காரின் தொண்டைக்குழிக்குக்



கொடுத்து இக்னீஷியனை உசுப்பினாள்.

கார் நகர்ந்தது.

'ரூஃப் காட்னிலிருந்து நான் கீழே இறங்கி வரும் போது ரிசப்ஷன்ல எனக்குப் போன் வந்திருக்கிறதாய்ச் சொன்னாங்க... போய்ப் பேசினேன். போன்ல அந்த ப்ளாக் மெயிலர்...'

'என்ன சொன்னான்...?'

'வேற ஒரு முக்கியமான வேலைக்குப் போயிட்டதனால ஹோட்டலுக்கு வரமுடியலையாம். நாளைக்கு ராத்திரி பதினோரு மணிக்கு ஹோட்டல் ரீகலுக்கு வரச் சொல்றான்...'

'நான் ங்களைப் பார்க்க வந்ததைக் கண்டுபிடிச்சிட்டானா...?'

'அதைப் பத்தி ஒண்ணும் சொல்லலை...'

'கார் ஹோட்டலின் காம்பௌண்ட் கேட்டை நெருங்கிய விநாடி - அந்த கார் எதிர்ப்பட்டு - மறிக்கிற மாதிரி நின்றது.

அந்தக் காரின் ட்ரைவிங் சீட்டில் உட்காந்திருந்த ஒரு இளம் பெண் வேகவேகமாய் கீழே இறங்கி வந்தாள். ஹேமலதாவுக்குப் பக்கத்தில் வந்து நின்றதும் - இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைத்தாள்.

வந்தது.

சிறிது தூரம் நடந்ததுமே -

ஜெயகோபாலுக்குப் புரிந்து போயிற்று.

அது ஒரு கல்லறை பிரதேசம். பூமியில் ஆங்காங்கே வெள்ளை அடிக்கப்பட்ட நீள் செவ்வக சமாதிகள். வாடின மாலைகள்.

மேற்கொண்டு நடக்க முடியாமல் நின்றார் ஜெயகோபால்.

'என்ன நின்னுட்டீங்க பி.பி. ஸார்...?'

'இது... இது...?'

'புரியலையா பி.பி. ஸார்...? சமரசம் உலாவும் இடம். ஆண்டிக்கும் அரசனுக்கும் இங்கேதான், ஆண்டவன் சமமான படுக்கை போட்டிருக்கிறான்.'

ஜெயகோபால் கண்களில் மரண பயத்தோடு கை கூப்பினார். 'ஏ... என்னை... ஒ... ஒண்ணும் பண்ணிடாதே...?'

'ஏன்... இன்னம் ஒரு நாற்பது வருஷம் உயிர் வாழ்ந்து இந்த நாட்டுக்குச் சேவை செய்யப் போறீங்களா...? ம்... நடங்க...'

முழங்கையால் நெட்டித் தள்ளினான் அவன். கீழே விளப்போன ஜெயகோபால் சுதாரித்துக் கொண்டு நடந்தார். ஒரு நிமிஷ நடைக்குப் பின் -



நாச்சியப்பன் நின்றான். கையிலிருந்த அரிக்கேன் விளக்கை அருகிலிருந்த மரக்கிளையில் மாட்டினான்.

மரத்துக்குப் பின்னாள் படுத்திருந்த நாய் ஒன்று 'வள்' என்று ஒற்றைக் குரல் எழுப்பிக் குரைத்துவிட்டு குற்றுச் செடிகளுக்கு மத்தியில் புகுந்து ஓடியது.

'பி...பி... ஸார்...'

அவன் அவருடைய தோளில் தட்ட - திரும்பினார்.

'உங்களுக்கு இடது பக்கத்துல ஒரு சின்ன மண் மேடு தெரியுதே அந்தக் கல்லறை யாரோடதுன்ன தெரியுமா...?'

அவர் பார்த்துவிட்டு தலையாட்ட - அவன் தொடர்ந்தான். 'இது வேல்ராஜோட கல்லறை. வேல்ராஜ் யாருன்னு உங்களுக்குத் தெரியும். ஒரு பஞ்சாயத்து ஆபிசுக்குள்ள இரண்டு பெண்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்கத் திராணியில்லாத போலீஸ், வெளியூர் போய்விட்டு பஸ்ஸ்டாண்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பிட்டிருந்த இருபத்தைந்து வயசு வேல்ராஜை கைது பண்ணி ஸ்டேஷனுக்குக் கொண்டு

போய் அடிச்சு உதைச்சு... அந்த கொலை வழக்கில சம்பந்தப்படுத்திட்டாங்க... உங்க பங்குக்கு நீங்களும் போலீயான சாட்சியங்களை உருவாக்கி கோர்ட்ல பொய்க்கு மேல பொய்யாப் பேசி வேல்ராஜுக்குத் தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தீங்க... அவனை தூக்கு போட்டப்புறம், அவனோட பாடியை - அந்த இடத்துல தான் புதைச்சிருக்காங்க. வேல்ராஜ் இறந்த துக்கத்தை தாங்கிக்க முடியாம அவரோட மனைவி ரெண்டு வாரத்துக்கு முந்திதான் தற்கொலை பண்ணிக்கிட்டா. அவளோட உடம்பும் வேராஜீக்கு பக்கத்துலதான் புதைச்சிருக்கு...'

ஜெய்கோபால் வாய் குழறினார்.

'அ... அது... அது.. போலீஸ் ஜோடிச்ச கேஸ்... எனக்கு ஒண்ணும் தெரியாது...'

'என்னது உனக்குத் தெரியாதா...? நீ அட்டெண்ட் பண்ற கேஸ் எல்லாம் ஜெயிக்கணும். லா டிபார்ட்மென்ட்ல உனக்கு பிமோஷன் மேல பிரமோஷன் கிடைக்கணும்கிறதுதானே உன்னோட எண்ணம்? அதுக்காகத்தானே அப்பாவிகளையெல்லாம் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையும் வாங்கித் தந்தே...?'



ஜெயகோபால் மண்டியிட்டு உட்கார்ந்தார்.

'என்னை மன்னிச்சிடு. நான் செஞ்சது தப்புதான்... இனிமே பண்ணமாட்டேன்...'

'இனிமே பண்ண மாட்டேன்னு உத்திரவாதம் குடுத்திட்டே சரி. பண்ணின தப்புக்கு என்ன பரிகாரம்...?'

'பணம் எவ்வளவு வேணும்னாலும் தர்றேன்...'

'பண்ணின பாவத்துக்கு பணம்தான் பரிகாரம்னு நீ நினைக்கிறே.. 'மரணம்'ன்னு நான் நினைக்கிறேன்...'

'வே... வேண்டாம்... எ... என்னை ஒ... ஒண்ணும்... பண்ணிடாதே...!'

ஜெயகோபலின் புலம்பலைப் பொருட்படுத்தாமல் - பக்கத்தில் நின்றிருந்த கிழவனிடம் திரும்பினான்.

'நாச்சியப்பா...'

'தம்பி...'

'குழியை தோண்டிட்டியா...?'

'தோண்டிட்டேன் தம்பி...'

'எங்கே பார்க்கலாம்...?'

நநச்சியப்பன் மெதுவாய் நடந்து போய் - வேல்ராஜின் கல்லறைக்குப் பக்கமாய்ப் போய் - கால்மாட்டில் இருந்த அந்த பெரிய தகரப் பலகையை

தள்ளினான்.

கீழே கறுப்பு வாயோடு குழி தெரிந்தது.

'ஆழம் எவ்வளவு தோண்டினே...'

'நாலடி தம்பி...'

'போதுமா...?'

'போதும் தம்பி...'

'நீளம் போதாது போலிருக்கே... ஜெயகோபால் கொஞ்சம் உயரம்...'

'அதனாலென்ன தம்பி... உடம்பை மடக்கிப் போட்டுடலாம்...'

ஜெயகோபாலின் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. அவன் தன் கையில் இருந்த ரிவால்வரை அவர் பக்கமாய் திரும்பினான்.

'பி...பி...ஸார்...'

'ப்ளீஸ் வேண்டாம்...'

'மரணம் உங்களை ம்ன்னிக்கட்டும். வேல்ராஜின் காலலடிக்குக் கீழே உங்கள் பாவங்கள் சுத்தமாகட்டும்...'

சுட்டான்.

தோட்டாவைச் சரியாய் -

நெஞ்சில் வாங்கிக் கொண்டு - ஜெயகோபால் மல்லாந்து விழுந்தார். மரண அவஸ்தையில் கால்கள் உதறிக் கொள்ள - கிழவனிடம் திரும்பினான்.



'இழுத்துக் குழியில் தள்ளி மண்ணைப் போடு...'

கிழவன் செயல்பட்டான். உயிரை விட்டு விட கடைசி நிமிஷத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த - ஜெயகோபாலை - இரண்டு தோள்பட்டைகளையும் பிடித்து இழுத்து - மண்ணில் ரத்தக் கோடுகள் விழ - குழிக்குள் தள்ளினான்.

ஜெயகோபாலின் உடல் இரண்டாக மடிந்து மளிகைப் பொட்டலம் மாதிரி குழிக்குள் விழுந்தது.

கிழவன் மண்ணைத் தள்ள ஆரம்பித்தான்.

பத்தே நிமிடம்!

'போதும்...' சொன்னவன் பாண்ட் பாக்கெட்குள் கையை நுழைத்து - ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றை எடுத்து கிழவனின் கையில் திணித்தான்.

'நான் வர்றேன் நாச்சியப்பா...'

'தம்பி... காரை என்ன பண்ணப் போறீங்க...'

அவன் சிரித்தான். 'பயப்படாதே... காரை ஜெயகோபால் வீட்டுக்கு முன்னால நிறுத்திட்டு நான் பாக்கு போயிடுவேன்...'

கிழவன் தன் பாழடைந்த பற்களைக்

'அக்கா கல்யாணம் பண்ணிக்கலை...'

'ஏன்...?'

'கேட்டதுக்கு விருப்பமில்லைன்னு சொல்லிட்டாங்க...'

'இந்த வீட்ல நீங்க ரெண்டு பேர் மட்டும்தானா...?'

'ஆமா...'

'அம்மா அப்பா... கூடப்பிறந்தவங்க...?'

'யாருமில்ல...'

'ஹேமலதாவுக்கு மனநிலை பாதிக்கப்பட்ட விஷயம் முதல் முதலா உங்களுக்கு எப்ப தெரிஞ்சு..?'

'ஆறு மாசத்துக்கு முந்தி ஒரு நாள். அன்னிக்கு அமாவாசை தினம். ராத்திரி பதினோரு மணியிருக்கும். நல்லாத் தூகிட்டிருந்த நான் ஏதோ சப்தம் கேட்டு கண்ணை முழிச்சுப் பார்த்தேன். அக்காவோட ரூமிலிருந்து அந்த சத்தம் கேட்டது. அக்கா யார்கிட்டயோ சத்தம் போட்டு பேசிட்டிருந்தா. மெதுவா போய் - சாவித்துவாரத்துல கண்ணை வெச்சும் பார்த்தேன். அக்கா படுக்கையில் சம்மணம் போட்டு உட்கார்ந்து - எதிர்ல யாரோ உட்கார்ந்திருக்கிற மாதிரி பாவனை பண்ணிக்கிட்டு, 'நீ கேக்கிற பணத்தை என்னால தர முடியாது. உன்னால



என்ன பண்ண முடியுமோ பண்ணிக்கோ... நீ இப்படி வந்து தினமும் மிரட்டினா... நான் போலீஸ்ல சொல்லிடுவேன்...'

'.........'

'மரியாதையா எந்திரிச்சுப் போயிடு...'

'........'

'வராதே... என் பக்கத்துல வராதே...' - இப்படி தனக்குத் தானே பேசிட்டிருந்தாங்க. நான் கண்ணைக் கசக்கிக்கிட்டு உத்துப் பார்த்தேன். அக்காவுக்கு முன்னாடி யாருமே இல்லை... நான் பயந்து போய்க் கதவைத் தட்டினேன்...'

'அப்புறம்..'

'நான் கதவைத் தட்டினதுமே... அக்கா மலங்க மலங்க விழிச்சுக்கிட்டே வந்து கதவைத் திறந்து விட்டாங்க.... 'என்னக்கா யார்கிட்ட பேசிட்டிருந்தேன்'னு கேட்டேன். அதுக்கு அக்கா உதட்டை குழந்தை மாதிரி பிதுக்கிக் காட்டிக்கிட்டு நான் 'யார் கூடவும் பேசலையேன்'னு சொன்னாங்க...'

சுரேன் நெற்றியில் வியந்து கொண்டே சாருலதா சொன்னதை செவிமடுத்தான். அவள் தொடர்ந்தாள்.

'அதுக்கப்புறம் அக்காவை ரகசியமா ராத்திரி நேரங்களில கண்காணிக்க ஆரம்பிச்சேன்.... முதல் அம்மாவாசையன்னிக்கு ராத்திரி பன்னிரெண்டு மணி இருக்கும் அக்கா காரை எடுத்துக் கிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஒரு 'ப்ளாக் மெயிலர்' தன்னை மிரட்டறதாகவும், வந்து காப்பாத்தும்படியாகவும் புகார் பண்ணினாங்க. போலீசும் உடனே புறப்பட்டு வீட்டுக்கு வந்தாங்க. போலீஸ் வீட்டுக்க வீட்டுக்கு வந்து விசாரிச்சிட்டிருக்கும்போதே - எனக்குத் தூக்கம் வருதுன்னு சொல்லித தூங்கிட்டாங்க. அக்காவோட பிஹேவியரைப் பத்தி போலீஸ்கிட்ட சொன்னதும் அவங்க சமாதானமாகிப் போயிட்டாங்க. அதுக்குப் பின்னாடி ரெண்டாவது அமாவைசையன்னிக்கு அக்கா போலீஸ் கமிஷனர் வீட்டுக்கே போயிட்டாங்க... நலலவேளையா நான் ஃபாலோ பண்ணிட்ட போய் கூட்டிட்டு வந்தேன்... ஒவ்வொரு அமாவாசையன்னிக்கும் இதே ரோதனைதான்... இன்னிக்கு அமாவாசைங்கிறதை மறந்து போய் - நான் அசந்து தூங்கிக்டிருந்த நேரத்துல அக்கா உங்களுக்கு போன பண்ணி சிரமத்தைக் குடுத்திட்டாங்க...'



சுரேன் புன்னகைத்தான். 'நோ ப்ராப்ளம்... உங்க அக்காவை ஏதாவது சைக்யாட்ரிஸ்ட்கிட்டே காட்டினீங்களா...?'

'ம்... ரெண்டு மூணு சைக்யாட்ரிஸ்ட்கிட்டே கூட்டிட்டு போனேன். எந்தப் பயனும் கிடைக்கலை. கடைசியா டாக்டர் ஹரேஷ் அட்டென்ட் பண்ணினார். ஸைக்கோ ட்ரீட்மெண்ட் கொடுத்தார். கொஞ்சநாளா பரவாயில்லாமே இருந்தது. இன்னிக்கு அக்கா பழைய மாதிரியே நடந்திருக்காங்க....'

'டாக்டர் ஹரேஷ் ஹேமலதாவை டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு என்ன சொன்னார்?'

'ஏதோ சம் ஃபியர் காம்ப்ளக்ஸ்தான்னு சொன்னார்...'

'மிஸ் சாருலதா... எனக்கு இன்னமும் ஆச்சர்யமாயிருக்கு...! டாக்டர் ஹேமல்தா எனக்குப் போன் பண்ணின போது தெளிவா பேசினாங்க. ஓயிட் ஸாரி, ஓயிட் ப்ளவுஸ், ஓய்ட் டம்பப் பை ஓயிட் ஸ்லிப்பர் - இந்த அடையாளங்களோடு ஹோட்டலுக்கு வருவேன்னு சொன்னாங்க. அதே மாதிரி வந்தாங்க. ஹோட்டலிலேயும் ரொம்ப டீஸண்ட்டா புத்திசாலித்தனமா

ஹரேஷ் கை குலுக்கி புன்னகைத்தார். ''ஹேமலதா ரொம்பவும் தொந்தரவு குடுத்துட்டாங்களா.. மிஸ்டர் சுரேன்..?''

''ஓரளவுக்கு...''

''காரணம்... அவங்களுக்கு இருக்கிற ஃபியர் காம்பளக்ஸ் தான். நான் கடந்த பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி எடுத்த ட்ரீட்மெண்ட்ஸ் நல்ல பலனைக் குடுத்திருக்கும்ன்னு நினைச்சேன்...''

சாருலதா, டாக்டர் ஹரேஷை ஹேமலதா படுத்திருந்த கட்டிலுக்குக் கூட்டிப் போனாள். ஹரேஷ் அருகில் இருந்த ஸ்டூலில் உட்கார்ந்து ஹேமலதாவின் இருதயத் துடிப்பையும் நாடித் துடிப்பையும் சரிபார்த்துவிட்டு கவலையாய் நிமிர்ந்தார்.

''ஷாக் ட்ரீட்மெண்ட்ஸை அடுத்த வாரத்திலிருந்து காமண்ஸ் பண்ணனும்...''



## 8

டி.எஸ்.பி தனசேகரன் தன்னுடைய ஜீப்பை பிராஸி கூட்டர்



ஜெயகோபாலன் வீட்டுக்கு முன்பாய் நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினார். மாலை எட்டு மணி.

வேலையாள் கண்ணுசாமி தலைக்குக் கட்டியிருந்த துண்டை அவிழ்த்துக் கையில் வைத்துக் கொண்டு - உள்ளேயிருந்து ஓடி வந்தான்.

''கும்புடறேன் அய்யா..!''

''என்ன கண்ணுசாமி... அய்யா வீட்ல இருக்காரா..?''

''இல்லீங்களேய்யா...''

''எங்க போனார்...''

''எங்கே போனார்ன்னு தெரியல்லீங்கய்யா. நான் காலையில ஆறு மணிக்கு வேலைக்கு வந்தப்ப வாசல் கதவு திறந்தே இருந்துச்சுங்க... அய்யா ஞாபகமறதியா பூட்டாமே வாக்கிங் போயிட்டாரோன்னு நினைச்சேன் ஆறு மணியிலிருந்து அய்யாவுக்கு நான் காத்திட்டிருக்கேன்...''

டி.எஸ்.பி. தனசேகரன் தாடையைச் சொறிந்தார். ''காரையும் எடுத்துட்டுப் போகலை போலிருக்கே...?''

''ஆமாங்கய்யா..''

''ஃப்ரண்ட்ஸ் யாராவது கார்ல வந்து அவசர அவசரமா கூட்டிட்டுப்

ஒன்பது மணி.

''என் காலை நேர வணக்கம் குருநாதரே!'' - கவிதா ஒரு 'பளீர் சிரிப்போடு அலுவலகத்தில் நுழைந்தாள். தோளில் இருந்த டம்பப் பையை சுவர் ஆணியில் மாட்டினாள். ரிவால்விங் நாற்காலிக்கு சாய்ந்து யோசனையில் இருந்த சுரேன் ''கவிதா... இப்படி வந்து எம் முன்னாடி உட்கார்'' என்றான்.

''என்ன காலையிலேயே அரட்டையா?''

''அரட்டையில்லை... நேத்து ராத்திரி.. நீ வீட்டுக்கு கிளம்பிப் போனதுமே ஒரு கேஸ்..''

''அடேடே...! நான் இல்லேன்னா உங்களுக்கு எதுவுமே பிடிபடாதே...? க்ளெயிண்டை போகச் சொல்லிடுங்களா...-

''நீ வெளியே போனதைப் பார்த்துட்டுத்தான் க்ளெயிண்டே உள்ளே வந்தாராம்...''

''அழகா வாரிட்டீங்க... பாஸ்...! கேஸ் என்னவோ? வந்தது ஆணா.. பெண்ணா?''

சுரேன் நேற்று ராத்திரி நடந்த சம்பங்களை ஒரு சிறுகதை மாதிரி சொல்லி முடித்தான். கவிதா



இமைக்காமல் கேட்டுவிட்டு - நெற்றி நிறைய ஆச்சர்யப்பட்டாள்.

''அப்படீன்னா இது உண்மையான ப்ளாக் மெயிலர் கேஸ் கிடையாது...?''

''கிடையாது. ஆனா, டாக்டர் ஹேமலதாவோட வாழ்கை ப்ளாஷ்பேக்கில் விரும்பத்தகாத சம்பவம் ஏதோ நடந்திருக்கு.. அந்த ஃபியர் காம்ப்ளெக்ஸ் வர்றதுக்குக் காரணம்.. அந்தச் சம்பவம் தன் சைக்கிரியாட்டிஸ்ட் டாக்டர் ஹரேஷுக்கு அது பிடிபடலை. அவர் ஹேமலதாவை ஒரு மனநோயாளியாகத்தான் பார்க்கிறாரேயோழிய ஹேமலதாவோட ப்ளாஷ்பேக்கைப் பிரிச்சுப் பார்க்கலை...''

''நீங்க பிரிக்கப் போறீங்களாக்கும்..?''

''ஆமா...''

''சாருலதாவுக்கு ஹேமலதாவோட வாழ்க்கையைப் பற்றி ஒரு மைக்ரோ மில்லி மீட்டர் பிசகாமே தெரிஞ்சிருக்கணுமே...?

''பொதுப்படையா தெரிஞ்சிருக்கு. ஆனா, ஹேமலதா மனசுக்குள்ளே சில ரகசிய அறைகள் இருக்கு... அந்த அறைகளைத் திறந்தா...''

''பாஸ்...! இந்த கேஸைப் பத்தி

தோட்டாக்கள் இருப்பதாகவும் - அந்த ஐந்து தோட்டாக்களும் ஐந்து பேரைக் கொல்லப் பயன்படுத்தப்படும் என்றும் சொல்லியிருக்கிறான். அது சற்று கவலைத்தரக் கூடிய் விஷயம்... அவன் கொலை செய்வதற்கான மோட்டீவ் என்ன என்று தெரியாமல் நாம் எந்த முயற்சிகளையும் எடுக்க முடியாது..''

அஸிஸ்டண்ட் கமிஷனர் ராஜேந்திரன் டி.எஸ்.பியை ஏறிட்டார். ''பப்ளிக் ப்ராஸிக்கூட்டர் ஜெயகோபாலுக்கு அரசியல் ஈடுபாடு வெகு குறைவு தான். அரசியலில் தீவிரமாய் இறங்கும் உத்தேசமும் அவரிடம் இல்லை. என்னுடைய அஸ்ஸெம்ஷன் என்னவென்றால் ஜெயகோபால் தன்னுடைய தொழில் ரீதியில் பெரிய வெற்றிகளைப் பெற்றவர். நம்மால் குற்றம் சாட்டப்பட்டு - கோர்ட் கூண்டில் நிறுத்தப்பட்ட அத்தனை பேருக்கும் அவர் தண்டனையை வாங்கிக் கொடுத்திருக்கிறார். தான் எடுத்துக்கொண்ட கேஸில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தன் வாதத் திறமையை மட்டும் நம்பாமல் - சட்டத்துக்குப் புறம்பாகச் சில குறுக்கு வழிகளையும் கையாண்டவர். நிறைய நிரபராதிகள் அவரால் தண்டிக்கப்பட்டு



இருக்கிறார்கள். பெரும்பாலும் தூக்குத் தண்டனைகள். அப்படித் தூக்கில் போடப்பட்ட அந்த நபருடைய குடும்பத்தைச் சேர்ந்த யாராவது ஜெயகோபாலை கடத்திப் போய் கொலை செய்திருக்கலாம்.''

கமிஷனர் தணிகாசலம் குறுக்கிட்டார். ''ஐ அக்ரி வித் யூ மிஸ்டர் ராஜேந்திரன். எனக்கு இந்தச் சந்தேகம் உண்டு. அண்மையில் அவர் எடுத்துக் கொண்ட கேஸ் எது.?''

''நஞ்சனூர் பஞ்சாயத்தில் நடந்த ரெட்டைக் கொலை கேஸ் சார். கழிப்பறையில் வெச்சு ரெண்டு பெண்களைத் தீர்த்துக்கட்டின சம்பவம்.''

''கொலையாளி யாரு?''

''வேல்ராஜ்ன்னு ஒருத்தன்.''

''உண்மையான கொலையாளி அவன்தானா?''

''சந்தேகத்தின் பேர்ல பிடிச்சோம்... அவனை விசாரிச்சிட்டிருக்கும் போதே பஞ்சாயத்து ஆபிஸ்ல நடந்த ரெட்டைக் கொலை சம்பந்தமா... தமிழ்நாடு பூராவும் கொந்தளிப்பாய் இருந்தது. கொலையாளியை உடனடியா அரெஸ்ட் பண்ணச் சொல்லி மினிஸ்டர் லெவல்லயிருந்து ஒரே' ப்ரஷர்.

வேல்ராஜை அடிச்சு உதைச்சு... கொலைகளை அதுக்கப்புறம் ப்ராஸிகூட்டர் ஜெயகோபால் ஸ்டாக் விட்னஸ்களை உருவாக்கி - கேஸை ஜோடனை பண்ணி - கோர்ட்ல பொய்யான ஆதாரங்களை ப்ரொட்யூஸ் பண்ணி - வேல்ராஜுக்கு தூக்குத் தண்டனை வாக்கிக் கொடுத்தார். வேல்ராஜுக்கு தூக்குத் தண்டனை நிறைவேறி இப்போ ஒரு மாசம் தான் ஆச்சு...''

''இந்த வேல்ராஜோட குடும்பப் பின்னணி என்ன?''

டி.எஸ்.பி. தனசேகரன் குறுக்கிட்டுச் சொன்னார் ''வயசான அம்மா, அப்பா, இறந்த மனைவி -வேல்ராஜ் இறந்த துக்கம் தாங்க மாட்டாமே ரெண்டு வாரத்துக்கு முந்திதான் தற்கொலை பண்ணிக்கிட்டு செத்தா...''

கமிஷனர் மேலும், கீழுமாய்த் தலையாட்டினார். ''நோ டவுட்...! வேல்ராஜோட சம்பந்தப்பட்ட யாரோ ஒருத்தர் தான்.... பப்ளிக் ப்ராஸிகூட்டரை கடத்திப் போயிருக்கணும்... வேல்ராஜுக்கு எந்த ஊரு...?''

''திருப்பூருக்குப் பக்கத்துல வஞ்சிப் பாளையம் ஸார்.''



''நீங்க இன்னிக்கே வஞ்சிப் பாளையம் புறப்பட்டுப் போங்க. வேல்ராஜோட உறவு ஜனத்தையும் நண்பர்களைய்யும் வட்டாரத்தையும் க்ளோஸா அப்ஸர்வ் பண்ணுங்க. ஸ்பாட்டுக்கு போங்க போகும் போது யூனிஃபார்ம் வேண்டாம் காஷுவலா போங்க... டைரக்டா இன்வால்வ் ஆகாமே... கொஞ்சம் தள்ளி நின்னே ஆப்ஸர்வ் பண்ணுங்க.''

''எஸ்... ஸார்....''



# 11

ஹேமா நர்சிங் ஹோம் சற்று பிரம்மாண்டமாய் முதல் தடவையாய் பார்க்கும் எவரையும் அசர வைக்கிற மாதிரி இருந்தது.

சுரேனும், கவிதாவும் அவுட் பேஷண்ட் வார்டுக்குள் நுழைந்தார்கள். வராந்தா ஓரமாய் நோயாளிகளில் பெரும்பாலும் பெண்கள்.

''கவிதா...''

''ம்...''

அந்தப் பெண் செடி மறைவினின்றும் வெளிப்பட்டு - பக்கத்து வராந்தா படியேறிப் போக - நர்ஸ். சுரேன் இருந்த திரைப் பக்கம் வந்து அவனைக் கடந்து இயல்பாய் நடந்து போனாள்.

சுரேன் பின் தொடர்ந்தான்.

ஆள் நடமாட்டம் இல்லாத ஆபரேஷன் தியேட்டர் அருகே வந்ததும் குரல் கொடுத்தான்.

''சிஸ்டர்..''

அவள் திரும்பினாள். அலட்சியமாய்ப் புருவங்களை உயர்த்தி ''என்ன..?'' 'என்றாள்.

''டாக்டர் வந்துட்டாரா?''

''வரலை..''

''எப்ப வருவார்..?''

''ஒரு அரை மணி நேரமாகும்..'' என்றவள் கொஞ்சம் கோபமாய் கேட்டாள். ''டாக்டரை பார்க்க வந்த நீங்க எதுக்காக இந்தப் பக்கமெல்லாம் வர்றீங்க..? போய் ஓ.பி. வார்டுல உட்கார்ந்திட்டிருங்க...?''

''எக்ஸ்க்யூஸ்மீ சிஸ்டர்... நான் உங்க டாக்டக்கிட்டே என் உடம்பைக் காட்ட வரலை...''

''தென்..?''



''உங்களைப் பத்தி ஒரு புகார் குடுக்கத்தான் வந்திருக்கேன்.''

''என்னைப் பத்தின புகாரா?''

''எஸ்.''

''என்ன புகார்...?''

''மருந்து ஸ்டோர் ரூம் சாவி உங்கிட்ட தானே இருக்கு?''

''ஆமா...''

''பேஷண்ட்ஸ்கிட்டே... லஞ்சமா ஒரு அமௌண்ட்டை வாங்கிக்க வேண்டியது... ஹாஸ்பிடலுக்கு சொந்தமான மருந்தை சிஸ்டர் ரூமிலிருந்து இஷ்டத்துக்கு எடுத்துக்குடுக்க வேண்டியது... இதைப் பத்திதான் டாக்டர் கிட்டே புகார் பண்ணப் போறேன்...''

நர்ஸின் முகம் உடனே வியர்த்தது.

''ஸ... ஸார்..அ..அதெல்லாம் ஹாஸ்பிடலுக்கு இலவசமா வர்ற சாம்பிள் மருந்து.''

''இலவசமா வர்ற மருந்து தானே அது?''

''ஆமா ஸார்...''

''அப்படின்னா நோயாளிகளுக்கு அதை இலவசமாத்தானே தரணும்..?''

''அப்படீன்னா எனக்கு ஹெல் பண்ணுங்க...''

''ப... பண்றேன்...''

''டாக்டர் ஹேமலதாவைப் பற் உங்களுக்கு என்னென்ன தெரியமே அதையெல்லாம் நீங்க சொல்லணும்...''

''சாயந்திரம் ஆறு மணிக் என்னோட ட்யூட்டி முடியுது ஸா அப்ப வெளியே போ பேசுவோமே...?''

''சரி, சாயந்திரம் ஆறரை மணிக் பாரதி பார்க் வாசல்ல உனக்காக காத்திட்டிருப்பேன். நீங்க வரணும்.''

''வந்துடறேன் ஸார்...''

''சொல்லிட்டு • வராமே இருந்த இந்த வேலையில நீங்க நீடிக் முடியாது...''

''கண்டிப்பா வர்றேன் ஸார்... அவன் வியர்ந்த முகமாய் அவச அவசரமாய் நகர்ந்து போக - சுரே ஹாஸ்பிடலின் முகப்புக்கு வந்தான்.

கவிதா கண்ணில் படவில்லை.

ஓ.பி. வார்டில் நோயாளிகளி கூட்டம் கசகசத்தது. குழந்தைக அழுதன. நர்ஸ்கள் எந்திரத்தனமா திட்டிக் கொண்டே நடந்தார்கள்.

சுரேனின் பத்து நிமி



காத்திருப்புக்குப் பின்னால் - கவிதா வந்தாள். முகத்தில் அயர்ச்சி.

''பாஸ்...''

''ம்...''

''தெரிஞ்ச நர்ஸ் ஒருத்தி கூட இல்லை...''

''கவலைப்படாதே...! நான் ஒருத்தியை மடக்கிட்டேன்.''

''எப்படி...?''

''வா... நடந்துகிட்டே பேசுவோம்...''

இருவரும் நகர்ந்து போர்டிகோவுக்கு வந்த விநாடி---

அந்த பியட் கார் TDV 6734 உள்ளே வந்து நின்றது. காரை ஓட்டி வந்த ஹேமலதா என்ஜினை அணைத்து விட்டு கீழே இறங்கினாள். ஜாக்கெட்டுக்கு மேலே தரித்திருந்த வெள்ளை கோட், உயர்த்திப் போட்ட கொண்டை.

சுரேன் அவளுக்கு முன்பாய்ப் போய் நின்றான்.

''குட்மார்னிங்...!'' என்றவன் குரலை இழுத்தாள். ''நீ..நீங்க..?''

''என்னை உங்களுக்குத் தெரியலையா டாக்டர்..?''

''ஸாரி... தெரியலை...''

''நான் சுரேன்...''

''எந்த சுரேன்...?''

சுரேன் தோள்களை குறுக்
உதட்டைப் பிதுக்கிக் கொண்டான்
'நேற்று ராத்திரி நடந்த சம்பவங்களை
சொல்லி - டாக்டரைக் குழப்
வேண்டாம்'' என்று நினைத்தவன்
''ஸார் டாக்டர்... அப்புறமா வந்
உங்களைப் பார்க்கிறேன்.'' - சொல்
நகர்ந்தான்.

ஹேமலதா தன் நெற்றியை
கீறியபடி - போகிற சுரேனையே
பார்த்துக் கொண்டிருந்தாள்.




வஞ்சிப் முாளையம் கிராம
சமீபத்தில் மழையில் - 'செழிப்பா
இருந்தது. வயல்கள் இளம் பச்சையில்
சிரித்தன.

டி.எஸ்.பி. தனசேகரன் சாதாரண
வேஷ்டி, சட்டை அணிந்து தோளில்
துண்டு போட்டிருந்தார். நெற்றியில்
விபூதியும் குங்குமமும் பிரகாசித்தன



தலைக்கு நிறைய எண்ணெய் போட்டு - க்ராப்பை ஒரு பக்கமாய் கூழித்துச் சீவியிருந்தார்.

தனசேகரன் கடைத்தெருவைக் கடந்து - மாரியம்மன் கோயில் சந்து என்று போட்டியிருந்த சிறிய வீதிக்குள் நுழைந்தார். முற்பகலின் வெய்யிலுக்குப் பயந்து தெருவில் ஆள் நடமாட்டம் குறைந்து போயிருக்க - தனசேகரன் மெல்ல நடந்து அந்த ஆஸ்பெஸ்டால் கூரை வேய்ந்த கட்டிடத்திற்கு முன்பாய் வந்து நின்றார். சுவரில் பொருத்தியிருந்த பெயர்ப் பலகையில் - 'மகாலிங்கம் விசைத்தறி. பட்டறை' என்ற வாசகம் தெரிய உள்ளே நுழைந்தார்.

கட்டிடத்துக்குள் - விசைத்தறியின் ராட்சஸ சத்தம் போட்டன. இவரைப் பார்த்ததும் காக்கி அரைடிராயரும், பனியனும் அணிந்த ஒரு இளைஞன் ஓடி வந்தான்.

''யா...யார்... வேணுங்க..?''

''முதலாளி இருக்காரா...?''

''இருக்காருங்க... சித்த உட்காருங்க... போய் கூட்டிட்டு வந்துடறேன்...'' அந்த ஆள் உள்ளே ஓடினான். தனசேகரன் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து இரண்டு நிமிஷம் காத்திருப்பதற்குள் -

நடுத்தர வயதில் அந்த மகாலிங்கம் கும்பிடு போட்டுக் கொண்டே வந்தார். சட்டை மாதிரியானஅரைக்கை பனியன். இடையில் சுற்றப்பட்ட ஒரு நாலு முழ வேஷ்டி. செக்கச் செவேலென்று தாம்பூலம் அரைபடும் வாய்.

''வாங்க... அய்யா... யார்ன்னு..?''

தனசேகரன் யோசித்து வைத்திருந்த பொய்யைச் சொன்னார். 'நான் மெட்ராஸிலிருந்து வர்றேன். என் பேரு கந்தசாமி. மெட்ராஸ் மண்ணடியில் நமக்கு பெட்ஷீட் வியாபாரம். போன வருஷம் உங்க பவர் லூம்பேக்டரியில் வேலை செய்யற வேல்ராஜ்ங்கிற ஆள் மெட்ராஸுக்கு வந்து என்னைப் பார்த்தான். எங்க கிராமத்துல தயாராகிற பெட்ஷீட்களை உங்களுக்கு குறைஞ்ச விலையில தர்றேன்... வேண்டிய சரக்குக்கு ஆர்டர் குடுங்கன்னு கேட்டான். ஆர்டர் வாங்கிட்டு ஒரு ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் கேட்டான். நானும் பையன் நாணயமானவனா இருக்கானேன்னு பணத்தைக் குடுத்துவிட்டேன்... பணத்தை வாங்கிட்டுப் போன ஆள் சரக்கையும் அனுப்பலை. லெட்டரும் போடலை.. திருப்பூருக்கு.. ஒரு வேலையா வந்த



நான்.... அப்படியே அவன் குடுத்திருந்த இந்த அட்ரசையும் பார்த்துட்டுப் போலாம்ன்னு வந்தேன். வேல்ராஜ் உங்க பாக்டரியில் தானே வேலை பார்க்கிறோன்...?''

மகாலிங்கம் வெறுப்பாய் புன்னகைத்தார். ''அய்யா விஷயம் தெரியாமே வந்திருக்கீங்கன்னு நினைக்கிறேன்...''

''விஷயுமா? என்ன விஷயம...?''

''வேல்ராஜ் போன மாசமே தூக்குல தொங்கிட்டானே...?''

தனசேகரன் ஒரு போலி அதிர்ச்சியைக் காட்டினார்.

''என்னது தூக்குல தொடங்கிட்டானா....?''

''ஆமாங்க... ஆள் ஒரு கொலைக் கேஸ்ல மாட்டிக்கிட்டான். குற்றம் ருசுவாகி தூக்குத் தண்டனை குடுத்துட்டாங்க...''

''அடப்பாவமே...!'' உச் கொட்டிய தனசேகரன் சில விநாடிகள் மௌனித்துவிட்டு கேட்டார்.

''வேல்ராஜை எப்ப தூக்குல போட்டாங்க...?''

''போன மாசம்...''

''ஆளைப் பார்த்தா கொலை

''இருங்க தாகத்துக்கு ஏதாவது...?

''ஒண்ணும் வேண்டாங்க

தனசேகரன் கை குவித்து வி
பர்ஃப்யூம்ஃபேக்டரியை விட்டு வெளி
வந்து - மணியக்காரரின் வீட்
நோக்கி நடந்தார்.



# 13

சரியாய் ஆறரை மணிக்கெல்ல
நர்ஸ் வசந்தி பாரதி பார்க் வாசல்
பிரசன்னமானாள். காலையில் நர்
யூனிஃபார்மில் பார்த்ததைக் காட்டி
சேலையில் அழகாய் இருந்தா
கண்களில் மட்டும் லேசாய் கலக்கம்.

கவிதா பார்க்கின், இன்னொ
திசையில் உட்கார்ந்து கொண்டு
சுரேனையும், வசந்தியை
கவனித்தபடி இருந்தாள்.

வசந்தி சுற்றும் முற்
பார்த்துவிட்டு - சுரேனை ஏறிட்டா
''ஸார்! டாக்டர் ஹேமலதாவைப் ப
உங்களுக்கு என்ன தெரியணும்...?''

''அவங்களோட நடவடிக்கைக



தா தப்பு இருக்கிற மாதிரி தெரியுது.
த ஓரளவுக்குக்
டுபிடிச்சுட்டேன்... மீதி
ரங்களையும் தெரிஞ்சுகிட்டு
வடிக்கை எடுக்கிறதுக்காகத்தான்...
ார்ட்மெண்டிலிருந்து என்னை
ுப்பிச்சிருக்காங்க... டாக்டர்
மலதா ஒரு 'ப்ளாக் மெயில்'
ஷயத்துல மாட்டியிருக்காங்கன்னு
னைக்கிறேன். சரியா...''

அவள் வியந்தாள்.

''ஸார் உங்களுக்கே விஷயம்
ரிஞ்சிருக்கும் போலிருக்கே!''

''தெரியும்... தெரிஞ்சுக்கிட்ட
ஷயத்தில் தெளிவுஇல்லை. அதை
ளிவா சொல்ல வேண்டியது உங்க
ாறுப்பு...''

''ஸார்! டாக்டரைப் பத்தின எல்லா
ஷயத்தையும் உங்ககிட்ட
சால்றேன். ஆனா... நாளைக்கு
ன்கொய்ரி 'அது இது'ன்னு வரும்
ோது என்னை மாட்டி விட்டுடா
ங்க...''

''நீங்க விஷயத்தை... சொல்லுங்க
ங்க பேர் வெளியே வராதபடிக்கு
ான் பார்த்துக்கிறேன்...''

வசந்தி மறுபடியும் சுற்றும் முற்றும்
ார்த்துவிட்டு சுரேனை ஏறிட்டாள்.

''சொல்லுங்க...''

''டாக்டர் முன்னே ம
கலகலப்பாயில்லை. முன்னேயெல்
தினசரி ஹாஸ்பிட
வந்திட்டிருந்தவர் - இப்ப அடி
உடம்பு சரியில்லையின்னு
போட்டுடறார். அவர் ஏன் வர
இருக்கார்ங்கிறதுக்கான கார
எனக்குத் தெரியலை. டாக்டரம்மா
பத்தி எனக்குத் தெரிஞ்சது இவ்வ
தான் ஸார்... நான் கிளம்பட்டுமா?''

''ஒரே ஒரு தகவல்''

''என்ன ஸார்'' ''ஹேமலதா
கார் ட்ரைவர் பேர் எ
சொன்னீங்க?''

''விட்டல்''

''அவன் வீடு எங்கே
தெரியுமா...''

''தெரியாது ஸார்.. அதுவுமில்லா
அவன் இப்ப வேலையில இல்
மூணு மாசத்துக்கு முன்னதா
வேலையை விட்டு
போயிட்டான்...''

''வேலையை விட்டு
போயிட்டானா..? ஏன்..?''

''எனக்கு காரணம் தெரி
ஸார்...''





# 14

''வாங்க ஸ்டர் சுரேன்!'' புஸ்தகம் ஒன்றை
த்துக் கொண்டிருந்த சாருலதா
வேற்றாள். பக்கத்தில் இருந்த
விதாவை 'யார்?' என்கிற மாதிரி
ர்த்தாள்.

''ஷி ஈஸ் மை ப்ரொபஸனல்
ஸிஸ்டேண்ட். பேரு கவிதா.
க்கமா சொல்லப் போனா என்
லது கை, இடது கை ரெண்டுமே
விதா தான்...''

''உட்காருங்க..''

உட்கார்ந்தார்கள்.

''அக்காவுக்கு நாளையிலிருந்து
க்டர் ஹரேஷ் சைக்கோ
ட்மேண்ட்களை கமேன்ஸ்
ண்ணப்போறார்...''

''மிஸ் சாருலதா...! உங்க சிஸ்டர்
வகாரத்துல எனக்குச் சில
தேகங்கள்...''

''என்ன...?''

''எல்லாமே நான்கேள்விப்பட்டவை

அக்கா என் பேச்சைக் காதிலேயே போட்டுக்கலை. இப்ப அக்கா மெண்டலா அப்ஸெட் ஆனதுக்குக் குாரணம் ஒரு ப்ளாக் மெயிலரோட டேலிபோன் கால்ஸ்...''

''ப்ளாக் மெயிலரோட டெலிபோன் காலா..-''

'''எஸ்..! அக்காவைப் பற்றிய எல்லா உண்மைகளும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கிறதுனால... நானும் எதையும் மறைக்க விரும்பலை. கடந்த ஆறு மாச காலமாவே அக்க ஒரு ப்ளாக் மெயிலர்கிட்டே மாட்டிக்கிட்டு இருக்கா. ஒரு தடவை அவன் போன் பண்ணும் போது - நான் எக்ஸ்டென்ஷன் டெலிபோன் ரிஸிவரை எடுத்து ஒட்டுக் கேட்டேன். அக்காவை ப்ளாக் மேயில் பண்ணி பணம் கேட்டான். அக்காவும் அவ்வப்போது... பணத்தைக் கொண்டு போய் குடுத்துட்டு வந்தா...! சம்பாதிச்சப் பூணம் பையை விட்டு கணிசமா போயிருக்கிற அதிர்ச்சியும் ஒரு பக்கம், நாளைக்கு விஷயம் வெளியே தெரிஞ்சா என்னவாகுமோ என்கிற பயம். இந்த அதிர்ச்சியும் பயமும் சேர்த்து அக்காவை மென்ட்டல் பேஷண்ட் ஆக்கிடுச்சு. போலீஸ்ல மாட்டிக்கிற மாதிரி கனவு கண்டிட்டு



அலர்றதும் - உங்களை மாதிரியான டிடெக்டிவ் ஏஜென்ஸிக்கு போன் பண்ணி வரச்சொல்றதும் நாளுக்கு நாள சகஜமாயிடுச்சு...! எனக்கு இப்ப இருக்கிற கவலையெல்லாம் 'மென்ட்டல் சிக்' கோடு இருக்கிற அக்காவைப் பழைய நிலைமைக்கு எப்படி கொண்டுட்டு வர்றதுங்கிறதுதான்.''

''அந்த ப்ளாக் மெயிலடா யாரு..?''

''தெரியலை...''

''வேலையை விட்டு நின்னுட்ட கார் டிரைவர் விட்டலாய இருக்குமோ..?''

''எனக்கும் அந்த் எண்ணம் உண்டு.''

''விட்டல் ஏன் வேலையை விட்டு நின்னுட்டான்.''

''காரணம் தெரியலை. விட்டல் வேலையை விட்டு நின்னுட்டதா அக்கா சொல்லித்தான் எனக்குத் தெரியும். விட்டல் அப்பா, அம்மா இல்லாத ஒரு அநாதை அவனுக்குன்ன எந்தச் சொந்த பந்தமும் கிடையாது...''

சுரேன் எழுந்தான்.

''என்ன எந்திரிச்சுட்டீங்க..?''

''உங்க அக்காவை ஆஸ்பத்திரிக்கே போய் விசாரிச்சுட்லாம்ன்னு தான். வீட்டுக்கு வந்தா அவங்க மனநிலை

எப்படி இருக்கும்ன்னு சொல்ல முடியாதே...?''

''மிஸ்டர் சுரேன் எனக்காக ஒரு உதவி.''

''என்ன...?''

''அக்காவை நீங்க விசாரிங்க... பட் அவங்க சொல்ற உண்மைகளை போலீஸ் வரைக்கும் கொண்டு போயிடாதீங்க... அக்காவால அதை தாங்கிக்க முடியாது - நீங்க ஒரு லாயர் மாதிரி இருந்து - அக்காவை இந்தச் சிக்கலிலிருந்து விடுவிக்கணும்.... நீங்க கேக்கிற ஃபீஸை நான் தர்றேன்....''

''மொதல்ல அந்த ப்ளாக் மெயிலர் யார்ங்கறதை கண்டுபிடிப்போத். ''சொல்லிக் கொண்டே நகர முயன்ற சுரேன் டீபாயின் மேல் உட்கார்ந்திருந்த டெலிபோன் அலறும் சத்தம் கேட்டு நின்றாள்.

சாருலதா ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

ஒரு பெண்ணின் குரல் அவசர அவசரமாய் கேட்டது.

''சாருலதா மேடமா...?''

''ஆமா...''

''மேடம்! நான் ஸ்டாஃப் நர்ஸ் வீணா பேசறேன்.''



''என்ன..?''

''டா... டாக்டரை...?''

''டாக்டரை...?''

''யாரோ துப்பாக்கியால சுட்டுட்டாங்க... உயிருக்கு ஆபத்தான நிலைமையில...''

சருலதாவின் கையில் இருந்த ரிஸீவர் அதிர்ச்சியில் நழுவி டீபாயின் கண்ணாடிப் பரப்பு மேல் விழுந்தது.




கமிஷனர் முன்பு நின்றிருந்தார் டி.எஸ்.பி. தனசேகரன்.

''வஞ்சிப்பாளையம் போய் வந்தீங்களே... எனி யூஸ் ஃபுல் மெஸேஜ் மிஸ்டர் தனசேகரன்?''

''ஸாரி ஸார்...! ரெண்டு நாட்கள் டீப் என்கொய்ரி பண்ணியும் நோ யூஸ். வேல்ராஜுக்கு ரொம்பவும் நெருக்கமான ஃப்ரேண்ட் சாம்பமூத்தின்னு ஒருத்தன். அவன் டைபாய்ட் காய்ச்சலில் பாதிக்கப்பட்டு - எலும்பும் தொலுமா ஆஸ்பத்திரியில் படுத்திருக்கான். வேல்ராஜோட



# 16

பிரமண

வாயு சிலிண்டரின் உதவியால் மூச்சிறைத்துக் கொண்டு - ஐ.ஸி. யூனிட்டில் ஹேமலதா கிடக்க - வராந்தாவில் சுரேன் - கவிதா, அழுத முகமாய் சாருலதா, டாக்டர் ஹரேஷ், போலீஸ் கமிஷனர், டி.எஸ்.பி. தனசேகரன், ஒரு இன்ஸ்பெக்டர் நான்கைந்து கான்ஸ்டபிள்கள் கவலையாய் நர்ஸ்கள், ஆஸ்பத்திரி சிப்பந்திகள்.

தனசேகரன் அந்த ஸ்டாப்ஃப் நர்ஸை விசாரித்துக் கொண்டிருந்தார். 'அப்புறம்...?'

'அவுட் . பேஷன்ட்ஸ் எல்லாரும் போன பின்னாடி அந்த பர்தா போட்ட பெண் மாத்திரம் உட்கார்ந்துட்டிருந்தா ஸார். டாக்டரைப் பார்க்கணுமான்னு கேட்டேன். 'ஆமா'ன்னு சொன்னா... போய்ப் பாரு உட்கார்ந்திட்டிருக்கியேன்னு தட்டிட்டு நான் ஒரு இன்ஜெக்ஷனை எடுக்கிறதுக்காக பக்கத்து ரூமுக்குப்



போனேன். பக்கத்து ரூம்ல நான் இஞ்செக்ஷனை தேடிட்டிருந்தப்ப... டாக்டர் அந்த பொண்ணுகிட்டே போசிட்டிருந்தது எனக்கு நல்ல கேட்டது....'

'என்ன பேசிக்கிட்டாங்க...?'

'ஏம்மா... நான் பொம்பளை டாக்டர் தானே...? ஏன் இன்னுட்ம பர்தாவில் மூஞ்சியை மறைச்சுக்கிட்டு இருக்கே... எடு'ன்னு டாக்டர் சொன்னாங்க. அதுக்கு அவ ஏதோ கீச்சுக் குரல்ல சொன்னா. எனக்கு அது சரியா கேட்கலை. நான் தேடிட்டு இருந்த இஞ்ஜெக்ஷன் மருந்து கிடைக்காததனாலே அதை எடுக்கிறதுக்கு வராந்தா கடைசியில இருக்கிற மெடிக்கல் ஸ்டோர் ரூமுக்குப் போனேன். அங்கே மருந்தை எடுத்துக்கிட்டு ஜன்னல் வழியாக ஏதேச்சையா பார்த்தப்ப... அந்த பர்தா அணிந்த பொண்ணு வேகவேகமாக வாசலை நோக்கிப் போயிட்டிருந்தா. 'என்ன இவ... ஆம்பளை மாதிரி நடக்கிறாளேன்னு மனக்குக்குள்ள ஒரு விநாடி நினைச்சேன்... பத்து நிமிஷம் கழிச்சு மருந்தை எடுத்துக்கிட்டு டாக்டர் ரூமுக்கு வந்தப்ப... அவங்க மார்பு பூராவும் ரத்த மயமா மேஜைக்கு பக்கத்துல விழுந்து

கால்கள் துடித்தன.

'அ... அக்கா...'

தனசேகரன் ஹேமலதாவை நெருங்கிக் காதருகே குனிந்தார்.

'டாக்டர்...'

'.........'

அவளுடைய கண்ணிமைகள் சட்டென்று பிரிந்தன. உதடுகளில் ஒருவித நடுக்கம் தொற்றிக் கொள்ள ஏதோ பேச முயன்றாள்.

'டாக்டர்... உங்களைச் சுட்டது யாரு...?'

ஹேமலதாவின் விழிகள் பயத்தில் விரிந்தன.

'ட்ரை... டு... ஸ்பீக்... டாக்டர் உங்களைச் சுட்டது யாரு...?'

அவள் மூச்சிரைத்தாள்.

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் தள்ளி நின்றிருந்த சுரேன் டி.எஸ்.பி.யை நெருங்கினான். 'எக்ஸ்க்யூஸ் மீ ஸார்...' நான் டாக்டர்கிட்ட பேசிப்பார்க்கலாமா...?'

சுரேனை அடையாளம் புரிந்து கொண்ட தனசேகரன் தலையசைத்துவிட்டு தள்ளி நின்றார். சுரேன் ஹேமலதாவிடம் குனிந்தான்.

'டாக்டர்... நான் சுரேன்... பிரைவேட்



டிடெக்டிவ் ஏஜென்ஸி. உங்க உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை... தைரியமா இருங்க... உங்களைச் சுட்டது யாரு...?'

'.....'

'விட்டலா...?'

ஹேமலதாவின் முகத்தில் எந்த சலனமும் இல்லை.

'சொல்லுங்க டாக்டர்... விட்டலா...?'

அவள் நாக்கு வேகமாய் அசைத்தது. வலது கை உயர்ந்து சட்டென தாழ்ந்தது. கண்கள் ஸ்லோமோஷனில் சொருக - மூச்சிரைப்பு நின்றது. கண்கள் அப்படியே குத்திட்டது.

பக்கத்தில் நின்றிருந்த டாக்டர் அவசர நடையில் நெருங்கி நாடியில் பிடித்துப் பார்த்துவிட்டு - 'ஷி ஈஸ் டெட்' என்றார்.

ஷாருலதா வாய்விட்டு அழ -

மற்றவர்கள் மௌனமாய் அறையின்றும் - வெளிப்பட்டார்கள். சுரேனின் தோள்மேல் அந்தக் கை விழுந்தது. திரும்பினான்.

டி.எஸ்.பி. தனசேகரன்.

'ஸார்...'

'யதர் அந்த விட்டல்...?'

'ஹேமலதாவோட கார் டிரைவர்...'

யார் யார்ங்கிறதை லிஸ்ட் பண்ணணும்... அந்த லிஸ்ட்ல இல்லீகல் பேர்வழிகளை மட்டும் டிக்மார்க் பண்ணிக் கண்காணிக்கணும்...'

கமிஷனர் பெருமூச்சு வட்டார்.

'செத்துப் போன ரெண்டு பேருக்கும் வேண்டியவங்க எத்தனையோபேர் இருக்கலாம். அவங்களை லிஸ்ட் பண்றது அத்தனை சதாரண காரியமிலலை.'

சுரேன் குறுக்கிட்டுச் சொன்னான்.

'எக்ஸ்க்யூஸ்மீ சார்... நான் ஒரு யோசனை சொல்லலாமா...?'

'ப்ளீஸ்'

'கார் டிரைவர் விட்டலைப் பத்தி விசாரிக்கிறதுக்காக நானும் என்னோட அஸிஸ்டென்ட் கவிதாவும் இந்த வாரம் பூராவும் முழு மூச்சா ஜெயகோபால் வீட்டு வேலைக்காரங்களையும் சந்திச்சோம். விட்டலைப் பத்தி ஒரு உருப்படியான தகவல் கூட கிடைக்காவிட்டாலும் வேற சில தகவல்கள் கிடைச்சது.'

'என்ன தகவல்கள்?'

'ரெண்டு வருஷத்துக்கு முந்தி ஹேமலதா, தான் கட்டின வீட்டுக்கு கிரஹப்பிரவேசம் நடத்தியிருக்காங்க.



அதே மாதிரி ஜெயகோபாலுக்கு அவர் ப்ராஸிகூட்டர் ஆனதுக்காக அவர் வீட்ட ஒரு விழா எடுத்திருக்காங்க...'

'சரி...'

'அந்த ரெண்டு பங்க்ஷன்லேயும் வீடியோ காமிராவை வெச்ச பங்க்ஷனை கவரேஜ் பண்ணியிருக்காங்க. அந்த கேஸட்களை வாங்கி டெக்ல போட்டுப் பார்த்தா ரெண்டு பேருக்குமே வேண்டியவங்க யார்.. யார்... வந்திருக்காங்கங்கிறதை லிஸ்ட் பண்ணிடலாம்.

கமிஷனர் ஏ.ஸி.யிடம் திரும்பினார்.

'இதுவும் நல்ல யோசனையாத்தான் படுது...'.

'கேஸட்டுகளைப் போட்டுப் பார்க்க ஏற்பாடு பண்ணிடறேன் சார்...'

'மூ... இட்... இம்மீடியட்லீ...'




ராத்திரி பத்தரை மணி.

யூரோப்பியன் லாக்கர் ஹைலைட்ஸை டி.வி.யில்

அடங்கணும்னா என் சொந்தக் கிராமத்துக்குப் போய் பத்து நாள் இருந்துட்டு வந்தாதான் முடியும்...'

'ஜோஸ் நீ பயப்படறது அநாவசியம். ஜெயகோபலை கொல்றதுக்கு போலீஸ் யூனிபார்ம்ல போனே... ஹேமலதாவோட க்கதையை முடிக்கிறதுக்கு முஸ்லிம் பெண் மாதிரி பர்தா போட்டுக்கிட்டுப் போனே.... நிலைமை இப்படி இருக்கும் போது உன்னை யாராரே ஐடென்டிஃபை பண்ண முடியும்...? ஜெயகோபாலோட பாடியைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு - மயானத்திலே அடக்கம் பண்ணிட்டே மயானத்து வெட்டியான் நாச்சியப்பன் என்னிக்குமே அதைப்பத்தி வாயைத் திதிக்க மாட்டான். சூழ்நிலைகள் எல்லாமே ' உனக்கு சாதகமா இருக்கும் போது நீ ஏன் பயப்படணும்.? உனக்கு பயம் வருதுன்னா அதுக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். தன்னோட ப்ளாக் மெயில் வேலைகளுக்கு உதவி பண்ணின கார் டிரைவர் விட்டடலை ஹேமலதா தீர்த்துக் கட்டி - வீட்டுத் தோட்டத்துக்குள்ள புதைச்சிட்ட மாதிரி நானும் பண்ணிடுவேனோன்னு பயப்படுறியா...?'



'நோ... நோ... நான் அப்படியெல்லாம் நினைக்கலை டாக்டர்... என்னோட பயத்துக்குக் காரணம் போலீஸ்தான். அவங்க இந்தக் கொலைகளை கண்டுபிடிக்கிற முயற்சியில் ரொம்பவும் தீவிரமாயிருக்காங்க....'

'தெரியும்... தீவிரமாய் இருக்காங்கதான்... ஆனாலும் அவங்க உன்னை ஸ்மெல் பண்ண முடியாது. காரணம் இந்தக் கொலைகளுக்கான மோட்டிவ் வேற ஏதோ ஒரு திசையில் இருக்கிற மாதிரி காட்டியிருக்கிறோம். தூக்குத் தண்டனை அடைஞ்ச வேல்ராஜோட கேஸைத் துருவித் துருவி பார்த்துட்டிருக்காங்க... வேல்ராஜுக்கு நெருக்கமானவங்க யாரோ ஒருத்தர்தான் இந்தக் கொலைகளை பண்ணியிருக்கணும்ங்கிறது போலீஸோட ஒருமித்த எண்ணம். 'புல்லட் சேம்பர்ல இன்னும் நாலு தோட்ட இருக்கு. தோட்டாங்களை வாங்கிக்ககப் போகிற அந்த நலலு பேர் யார்ங்கிறது அடுத்த வாரம் தெரியும்ன்'னு - நீ டெலிபோன்ல கமிஷனர்கிட்ட பேசினது போலீஸை கதிகலங்க பண்ணியிருக்கு. நாம முடிக்கணும்ன்னு நினைச்ச ரெண்டு

பெரிய டாக்டர் பட்டாளமே இருக்கும்...'

-'டாக்டர் எனக்கு இன்னொரு சந்தேகம்...'

'என்ன?'

'சாருலதாவை போலீஸ் விசாரிக்கும் போது அவங்களைக் காதலிக்கிற விஷயத்தைச் சொல்லிட்டா...?'

'ரெண்டு வருஷ காலத்துக்கு நம்ம காதல் விவகாரம் வெளியே தெரியக் கூடாது. தெரிஞ்சா ஊர்ல இருக்கிற என்னோட மாமன் தன்னோட பெண்ணை எனக்கு பலவந்தமா கட்டி வெச்சிடுவார்ன்ன சாருலதாகிட்ட சொல்லி வெச்சிருக்கேன்... நீங்களா சொல்ற வரைக்கும் நான் வெளியே சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கா...'

'ஹேமலதா சம்பாதிச்ச சொத்து எவ்வளவு தேறும் டாக்டர்...?'

'நர்சிங் ஹோமின் மதிப்பே கிட்டத்தட்ட எழுபது லட்சம். பங்களாவோட மதிப்பு இருபது லட்சம். அதுவுமில்லாம கார்... நகைங்க... அப்படி சில்லறைச் சொத்தையெல்லாம் சேர்த்தா கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு வந்துடும்...'

ஹரேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்



போதே -

வாசல் காலிங் பெல் கதறியது.

ஜோஸும் ஹரேஷும் ஒருத்தரையொருத்தர் கத்திக்குத்து வாங்கியவர்களைப் போல் அதிர்ந்து போய் பார்த்துக் கொண்டார்கள்.

'யாரது...?'

'ஜோஸ்... நீ கட்டிலுக்குக் கீழே போய் ஒளிஞ்சுக்க... நான் யார்ன்னு பார்த்து அனுப்பிட்டு வந்துடுறேன்...'

ஜோஸ் சரசரவென்று கட்டிலுக்கு அடியில் போய் - பதுங்கிக் கொள்ள - ஹரேஷ் வேகமாய் நடந்து வாசல் கதவுக்கு வந்தார். தாழ்ப்பாளை விலக்கும் முன் பக்க வாட்டு ஜன்னலில் எட்டிப்பார்த்தார்.

சுரேன் - கவிதா.



## 19

'ஓ... நீங்களா... வாங்க வாங்க...' குரலில் ஒரு போலியான உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு டாக்டர் ஹரேஷ் சுரேனையும் கவிதாவையும்

வரவேற்றார். சுரேன் உள்ளே வந்து கொண்டே... 'ஸாரி டாக்டர்...' இந்த ராத்திரி நேரத்துல உங்களை தொந்தரவு படுத்தறோம்...' என்றான்.

'நோ ப்ராப்ளம்...'

தோள்களைக் குலுக்கிக் கொண்டே – முன் அறையில் இருந்த நாற்காலிகளைக் காட்டினார் ஹரேஷ்.

இருவரும் உட்கார்ந்தனர்.

'என்ன விஷயமா வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா...?'

'டாக்டர் . ஹேமலதா வீட்டுக் கிரஹப்பிரவேச வீடியோ கவரேஜ் கேஸட்டை போலீஸ் அதிகாரிகளோடு பார்த்தோம். ஹேமலதாவுக்கு ரொம்பவும் வேண்டியவங்க யார் யார்ங்கிறதை லிஸ்ட் பண்ணினோம். அப்படி அந்த கேஸட்டைப் பார்த்திட்டு இருக்கும் போதே போலீஸ் பார்வைக்குத் தட்டுப் படாத இரண்டொரு விஷயங்கள் என்னோட பார்வைக்கும் கவிதாவோட பார்வைக்கும் கிடைச்சது. அதைப் பற்றி விசாரிக்கத்தான் இந்த நேரத்துல உங்க வீட்டுக்கு வந்திருக்கோம். ஹேமலதாவோட கேஸை நான் பர்ஸனலா டீல் பண்ணிட்டிருக்கிற விஷயம் ஏற்கனவே உங்களுக்குத்



தெரியும்...'

ஹரேஷின் நெற்றியில் வியப்புக் கோடுகள். இருதயத்தில் ஓர் பய ட்ரம் லேசாய் அதிர்ந்தது.

'கேஸட்ல என்ன பார்த்தீங்க...?'

'அந்த கிரஹப்பிரவேசத்திற்கு நீங்களும்ம வந்திருக்கீங்க...?'

'ஆமா...'

'அழைப்பு யார்கிட்ட இருந்து... ஹேமலதாகிட்ட இருந்தா... இல்லை சாருலதாகிட்டயிருந்தா...?'

'ஹேமலதாகிட்டயிருந்ததான்... சாருலதா எனக்கு அப்போ பழக்கமில்லை... ஹேமலதா ஒரு டாக்டர் நானும் ஒரு டாக்டர்... அந்த முறையில் கூப்பிட்டாங்க... போனேன்...'

சுரேன் சிரித்தான்.

'டாக்டர் நீங்க பொய் சொல்றீங்க...'

'பொய்யா...?'

'எஸ்... சாருலதா கூப்பிட்டுத்தான் அந்த வீட்டுக் கிரஹப்பிரவேசத்துக்கு நீங்க போயிருக்கீங்க...'

ஹரேஷ் திடுக்கிட்டார்.

'எப்படிக் கண்டுபிடித்தார்கள்?'

'சாருலதா சொல்லியிருப்பாளோ...?'

என்ன டாக்டர் நான் சொல்றது சரியா...?'

ஹரேஷ் நடுக்கமாய் சுரேன் கைகளைப் பற்றிக் கொண்டார். 'மிஸ்டர் சுரேன்... இந்த விஷயத்தை நீங்க போலீஸ்ல... சொல்லலையே....'

'சொல்லலை...'

'இனிமேலும் சொல்லிடாதீங்க...'

'ஏன் சொல்ல வேண்டாங்கறீங்க...?'

'அநாவசியமான பிரச்சனைகள் வரும்...'

'பிரச்சனைன்னு எதைச் சொல்றீங்க...'

'மிஸ்டர் சுரேன்... நீங்க பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸி.. உங்களுக்கு வேண்டிய பீஸை நான் தர்றேன். உங்க டிமாண்ட் எவ்வளவாக இருந்தாலும் சரி... ஐ...வில் பே...'

சுரேன் சந்தோஷித்தான். 'டாக்டர் யூ ஹேவ் கம் டூமை பாய்ண்ட்.' ஐ... வாண்ட் திஸ்... எனக்கு வேண்டியது பணம்... டிமாண்டை சொல்லட்டுமா...?'

'சொல்லுங்க...'

'ரெண்டு லட்சம்'

'தர்றேன்...'

'எப்ப..?'



'நாளைக்கு...'

'இப்ப... கொஞ்சம் குடுக்க முடியுமா...?'

'இருங்க... கொண்டு வர்றேன்...'

எழ முயன்ற ஹரேஷை கைய்மர்த்தினான் சுரேன்.

'உட்காருங்க டாக்டர்... என்னோட அஸிஸ்டென்ட் கவிதா உங்கவிட்ட ஏதோ கேட்கணுமாம்...'

'என்ன...?'

கவிதா டம்பம் பையின் ஜிப்பைத் திறந்து - அந்த கைக்கு அடக்கமான பிஸ்டலை எடுத்துக் கொண்டாள். பிஸ்டலை ஹரேஷின் மார்புக்கு நேராய் நீட்டிக் கொண்டே கேட்டாள். 'ஹேமலதாவையும், ஜெயகோபாலையும் எதுக்காக தீர்த்துக் கட்டினீங்க...?'

ஹரேஷ் ஸ்தம்பித்தான்.

'நீ... நீ... என்ன சொல்றே...?'

'டாக்டர்... காதலிக்கிறது ஒண்ணும் தப்பில்லை... ஆனா காதலையே நீங்க மறைக்கப் பார்க்கிறீங்க... நானும் சாருலதாவும் காதலிக்கிறோம் அதனாலென்னன்ன நீங்க சொல்லியிருந்தா நாங்க பாட்டுக்கு வெளியில போயிருப்போம். காதலை